**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No. 77/2023**
Prosecution: **PW- 1**

**Deposition of the witness of LW-2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | சங்கீதா | **District** | வேலூர் |
| **Husband's Name** | பிரதாப் | **Calling** | இல்லத்தரசி |
| **Age** | 26/2026 | **Religion** | --- |
| **Village/Town** | தாமரைபாக்கம் | **Caste** | --- |
| **Taluk** | | **Aadhar Card No.** | 2857 1432 1392 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of July 2026.
1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பாக பிரிவு 355 BNSS மனு அனுமதிக்கப்பட்டது. 3 மற்றும் 5ம் எதிரி ஆஜர். 4ம் எதிரி PT Warrant மூலம் சிறையில் இருந்து நேரடியாக ஆஜர் படுத்தப்பட்டார். எதிரிகள் 1,3,5 தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 4ம் எதிரி அவரே நேரடியாக ஆஜராவதாகவும் தெரிவித்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் தற்போது எண்.104, திருக்குரல் நகர், விருபாக்ஷ புரம், தொரப்பாடி, வேலூரில் என் கணவர் வீட்டில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் என் தாய் வீடான எண்.240, அருந்ததியார் பாளையம், தாமரை பாக்கத்தில் வசித்து வந்தேன்.

2. 30.01.2018ம் தேதி காலை 11 மணிக்கு நான் மற்றும் நிஷா, தனகோட்டி, அசோக் ஆகியோர் அறுங்குன்றத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு சென்றோம். அப்பொழுது 5 நபர்கள் எங்களை பின் தொடர்ந்து வந்தார்கள். அவர்கள் விஜய், மோகன், லோகேஷ், மற்றும் இருவரின் பெயர் நினைவில் இல்லை. அப்பொழுது நிஷா என்பவரை இரண்டு நபர்கள் நிஷாவின் கழுத்தை பிடித்துகொண்டு அவர் அணிந்திருந்த கம்பல் மற்றும் செயினை கேட்டனர். நிஷா அவர் அணிந்திருந்த

கம்பலை கழற்றி அவரை பின் தொடர்ந்து வந்த நபர்களிடம் கொடுத்தார். குறிப்பாக யாரிடம் கொடுத்தார் என்று எனக்கு நினைவில்லை. நிஷா அணிந்திருந்த கம்பல் தங்க கம்பல் என்றும், செயின் கவரிங் என்றும் சொன்னார்.

3.விஜய், மோகன், லோகேஷ் ஆகியோர் தனிகோட்டியின் கழுத்தில் கத்தியை வைத்து நீ எதாவது கூச்சல் போட்டால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள். நானும், அசோக்கும் விட்டு விடுங்கள் என்று கத்தினோம். நீங்கள் கத்தினால் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். கோவிலின் நிர்வாகிகள் வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். அப்பொழுது எதிரிகள் கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். நான், நிஷா, தனக்கோட்டி, அசோக் ஆகியோர் ரத்தினகிரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

1. சம்பவம் நடந்த சமயத்தில் நான் எந்த ஊரில் வசித்து வந்தேன் என்றால் தாமரைபாக்கத்தில் வசித்து வந்தேன். அப்பொழுது நான் நர்சிங் படித்துகொண்டிருந்தேன். திமிரியில் உள்ள மாரனாதா மெடிக்கல் அக்காடமியில் படித்து வந்தேன். நிஷாவும் என்னுடன் தான் படித்து வந்தார்.

2.சம்பவம் நடந்த அன்று கல்லூரி இருந்ததா என்றால் இருந்தது. ஆனால் நான் அன்றைய தினம் கல்லூரிக்கு செல்லாமல் கோவிலுக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் கல்லூரிக்கு செல்லவில்லை என்றும், கோவிலுக்கு செல்கிறேன் என்றும் எனது பெற்றோரிடம் சொல்லாமல் சென்றேனா என்றால் இல்லை. அவர்களிடம் சொல்லிவிட்டு தான் சென்றேன். போலீசார் விசாரணையின்போது இந்த விவரங்களை சொன்னேனா என்றால் இல்லை.

3.தனகோட்டி திமிரியில் வசித்து வருகிறார். அசோக் ஆரணியில் வசித்து வருகிறார். நானும், தனகோட்டியும் ஒரு இருசக்கர வாகனத்திலும், அசோக் மற்றும் நிஷா என்பவர்கள் மற்றோரு இருசக்கர வாகனத்தில் சென்றோம்

என்றால் சரிதான். தனகோட்டி, நிஷாவின் தோழி என்பதால் எனக்கு அவரை தெரியும்.

4.கல்லூரியில் இருந்து சிவன் கோவில் 10 அல்லது 15 கிமீ க்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் கோவிலில் சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருப்பார்கள். போலீசார் விசாரணையின்போது நானும், நிஷாவும் அணிந்திருந்த நகைகள் குறித்து சொன்னோமா என்றால் அப்பொழுது சொல்லவில்லை.

5.போலீசார் விசாரணையின்போது சம்பவ நேரத்தில் அடையாளம் தெரியத 5 நபர்கள் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் மேற்சொன்ன 50 நபர்கள் இருந்தார்களா என்றால் சற்று தொலைவில் இருந்தார்கள்.

6.சம்பவ சமயத்தில் நானும், தனகோட்டியும் ஒரு மறைவான இடத்திலும், நிஷாவும் அசோக்கும் சற்று தள்ளி இருந்த ஒரு மறைவான இடத்திலும் இருந்தோம் என்றால் சரிதான். கோவில் இருந்து ரோடு எவ்வளவு தொலைவில் இருக்கும் என்றால் சுமார் 5 அடி தொலைவில் இருக்கும்.

7.சம்பவ சமயத்தில் நான் கத்தியதும் என் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் ஈடுபட்டதாக சொல்லப்படும் எதிரிகளின் பெயர்கள் போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான்.

8.சம்பவம் குறித்து நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நாங்கள் 4 நபர்களும் சேர்ந்து தான் புகார் கொடுத்தோம். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெற்றார்களா என்றால் இல்லை. எதிரிகள் கொள்ளையடித்து சென்றதாக சொல்லப்படும் நகைகளின் அடையாளம் மற்றும் அமைப்பு ஆகியவற்றை சொல்ல இயலுமா என்றால் இயலாது. எதிரிகள் கொள்ளையடித்து சென்றதாக சொல்லப்படும் நகைகளின் ரசீது போலீசாரிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

9.சம்பவத்தன்று மதியம் 12 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் அரை மணி நேரம் இருக்கும். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் சொல்ல சொல்ல நிஷா எழுதினார். அதன் பிறகு நான் சாட்சியாக இருப்பதால் என்னிடமும் கையெழுத்து பெற்றார்கள் என்றால் சரிதான்.

10.பின்னர் சிறையில் எதிரிகள் குறித்து அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. எதிரிகள் கத்தியை காட்டி மிரட்டி, நகையை பறித்து கொண்டு சென்றதாக சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரில்ல.

(3 மற்றும் 5ம் எதிரி தரப்பில் 1ம் எதிரியின் குறுக்கு விசாரணை முழுமையாக ஏற்றுகொள்ளப்படுகிறது).

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (4ம் எதிரி அவரது வழக்கிற்கு அவரே ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)**

1.சம்பவம் நடந்த சமயத்தில் நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். சம்பவம் பற்றி எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தில் ஈடுபட்ட 5 நபர்களின் பெயரும் தெரியுமா என்றால் தெரியும். அவர்களின் பெயர்கள் பாஸ்கர், விஜய், லோகேஷ் மற்ற இருவரின் பெயர் தெரியாது.

2.முதல் விசாரணையின்போது லோகேஷ் என்பவரின் பெயர் மட்டும் தான் தெரியும் என்று சாட்சியம் அளித்து விட்டு தற்பொழுது லோகேஷ், பாஸ்கர், விஜய் ஆகியோரின் பெயர் தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3.தனகோட்டி என்பவர் எனக்கு நட்பு ரீதியாக பழக்கம். நிஷாவிடம் இருந்து சம்பவ சமயத்தில் நகையை யார் பறித்தார்கள் என்றால் பாஸ்கர் என்பவர் பறித்தார். இதற்கு முன்பு சாட்சியம் அளித்தபோது நிஷா நகையை யாரிடம் கொடுத்தார் என்று தெரியாது என்று சொல்லவிட்டு தற்போது அதற்கு முரணாக

பாஸ்கரிடம் கொடுத்ததாக மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4.சம்பவம் 11 மணிக்கு நடந்தது, புகார் 12.30 மணிக்கு கொடுக்கப்பட்டது. சம்பவயிடத்தில் இருந்து ரத்தனகிரி காவல் நிலையம் செல்ல 1.30 மணி நேரம் ஆனதா என்றால் ஆமாம். கோவில் இருந்து காவல் நிலையம் 20 கிமீ தொலைவில் இருக்கும்.

5.புகாரை நான் மட்டும் கொடுத்தேனா அல்லது மற்றவர்கள் சேர்ந்து கொடுத்தார்களா என்றால் நான், தனகோட்டி, நிஷா, அசோக் ஆகியோர் சேர்ந்து தான் கொடுத்தோம். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரரணை செய்தார்களா என்றால் இல்லை.

6.சம்பவ சமயத்தில் வழி மடக்கி வழிபறி செய்த 5 நபர்களும் கத்தி வைத்திருந்தார்களா என்றால் 5 நபர்களும் வைத்திருந்தார்கள். மேற்படி 5 நபர்களும் எங்களை பின்தொடரும்போது ஒரு வண்டியில் இரு நபர்களும், மற்றோரு வண்டியில் 3 நபர்களும் வந்தார்கள்.

7.சம்பவத்தின்போது கோவில் வேலை செய்யும் ஒருவர் மட்டும் தான் வந்தார். அவரது பெயர் எனக்கு தெரியாது. சம்பவயிடத்தில் பொதுமக்கள் கூடிய உடன் வழிபறி செய்த 5 நபர்களையும் பிடித்தார்களா என்றால் பிடித்தார்கள்.

8.சம்பவத்தின்போது எனக்கு எத்தனை வயது என்றால் 20 வயது இருக்கும்.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.